# பதவி உயர்வுக் குழு தொடர்பாக எழும் ஐயங்களும் அதற்கான விளக்கங்களும்

(FAQ on Departmental Promotion Proposals)

| | | |
|---|---|---|
| 1 | அரசுத் துறைகளில் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது ஏன் தேர்வாணையத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும்? | இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 320(3)(ஆ)-வின்படி, தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமாகிறது |
| 2 | தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதிகளில் எந்த விதியில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது? | தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளில் விதி 16(இ)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது |
| 3 | எந்தெந்த வகைப் பதவிகள் பதவி உயர்வுக்குழுவின் (DPC) செயல்பாட்டெல்லைக்குள் வரும்? | 1. ஒரு பணித் தொகுப்பிலிருந்து வேறு பணித்தொகுப்பிற்கு மாறுகின்ற பதவி உயர்வு பதவியினங்கள்<br><br>2. தமிழ்நாடு மாநில பணித்தொகுப்பில் பொதுப்பணிகளிலடங்கிய பதவிகளில் ஒரு வகைப் பதவியிலிருந்து வேறு வகைப் பதவிக்கு மாற்றம் செய்யப்படும் பதவியினங்கள்<br><br>3. தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளில் பிற்சேர்க்கை 1-ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினங்கள் |
| 4 | பட்டியல் ஆண்டு என்பது எதைக் குறிக்கிறது? | குறிப்பிட்ட ஒவ்வொரு 12 மாத காலத்திற்கும் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். ஒரு பட்டியலுக்கான 12 மாத காலம் எந்த / எந்தெந்த ஆண்டில் பரவியுள்ளதோ அந்த ஆண்டினை / ஆண்டுகளைக் குறிக்கும்.<br>**எ.கா.1:** ஒரு பட்டியலுக்கான காலம் 05.03.1994 முதல் 04.03.1995 முடிய எனில், இதன் தொடர்புடைய பட்டியல் ஆண்டு 1994-1995 என்று அழைக்கப்படுகிறது.<br>**எ.கா.2:** ஒரு பட்டியலுக்கான காலம் 01.01.1994 முதல் 31.12.1994 முடிய எனில் இதன் தொடர்புடைய பட்டியல் ஆண்டு 1994 என்று அழைக்கப்படுகிறது. |
| 5. | பட்டியல் தயாரிப்பில் அறுதி நாள் (Crucial date) என்பது என்ன? | அந்தந்த பதவிக்கான தனி விதியிலும் / தற்காலிக விதியிலும் அப்பதவியில் பணியமர்த்தப்பட ஒவ்வொராண்டும் பதவி உயர்வுக்கான பட்டியல் தயாரிக்கும் பொருட்டு ஒரு அறுதி நாள் வரையறுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஆண்டின் அந்தக் குறிப்பிட்ட நாளின்படி அப்பதவிக்கான படிப்பு, பயிற்சி, துறைத்தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று, தகுதி பெற்றிருக்க வேண்டும். அதற்காக குறிப்பிடப்பட்டுள்ள நாளே அறுதி நாள் ஆகும் |
| 6 | காலிப்பணியிட மதிப்பீட்டுக்காலம் என்பது என்ன? | ஒவ்வொராண்டின் பட்டியலுக்கு எந்த 12 மாத காலத்தில் எந்தெந்த வகையில் காலிப் பணியிடம் ஏற்படும் என்று கணித்து மதிப்பீடு செய்யப்படுகிறதோ அந்தக் காலப்பிரிவே மதிப்பீட்டுக் காலம் எனப்படும்<br>**எ.கா.:** மேலே வ.எண்.4-இல் எடுத்துக்காட்டு 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் காலம் 05.03.1994 முதல் 04.03.1995 முடிய என்பதுதான் மதிப்பீட்டுக் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 7 | மதிப்பீட்டுக் காலம் என்பது எல்லா பதவிகளுக்கும் பொதுவான காலமாக இருக்குமா? | இல்லை.<br>1) தேர்வாணையத்தின் / பதவி உயர்வுக் குழுவின் அகப்பாட்டெல்லைக்குள் வராத பதவியினங்களைப் பொருத்தவரை, அப்பதவிக்கான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறுதி நாளுக்கடுத்த நாள் முதல் 12 மாத காலம்<br>2) தேர்வாணையத்தின் / பதவி உயர்வுக்குழுவின் (DPC) அகப்பாட்டெல்லைக்குள் வரும் பதவிகளுக்கு 21.04.1994 நாளிட்ட அரசாணை எண்.97-இல் பத்தி.14-அ-வின்படியான பிற்சேர்க்கை 4-இல், துறைவாரியாக பதவிகளுக்கான மதிப்பீட்டுக் காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| 8 | பதவி உயர்வுக் குழுவிற்கு (DPC) எப்போது கருத்துரு அனுப்ப வேண்டும் | அரசுக்கு எப்போது அனுப்பப்படவேண்டும், பதவி உயர்வுக் குழுவிற்கு எப்போது அனுப்பப்பட வேண்டும் என்ற துறைவாரியான பதவிகளுக்கான திட்டம் 21.04.1994 நாளிட்ட அரசாணை எண்.97-இன் பத்தி 14-அ-வின்படியான பிற்சேர்க்கை 4-இல் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. |
| 9 | ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் பெயர் சேர்க்கப்பட வேண்டிய இனங்களுக்கும் (Re-opened cases) பதவி உயர்வுக் குழு கூடிதான் முடிவெடுக்க வேண்டுமா? | இல்லை.<br>பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் பரிந்துரையுடன் கூடிய கருத்துருவை தேர்வாணையத்திற்கு அனுப்பி, ஆணையத்தின் இசைவைப் பெற்றுக் கொள்ளலாம். |
| 10 | ஒற்றைச் சாளர முறையில், முழுமையாக தயாரிக்கப்பட்ட கருத்துருக்கள் மட்டும் தான் பரிசீலிக்கப்படுமா? கருத்துரு தயாரிப்பதில் ஏற்படும் ஐயங்களுக்கு ஆலோசனை பெறவியலுமா? | தொடர்புடைய, துறை அலுவலர்களால் எழுப்பப்படும் ஐயங்களுக்கும் ஆலோசனை பெறலாம். |
| 11 | பட்டியல்கள் அல்லது காலிப்பணியிட மதிப்பீட்டுக் காலம் முடிவுற்ற நிலையில் தாமதமாக பட்டியல் தயாரிக்கும் போது, விடுப்புக்காப்புக்காகவும், எதிர்பாரா இனங்களுக்காகவும் கூடுதல் காலிப் பணியிடங்களை சேர்த்து காலயிட மதிப்பீடு செய்யலாமா? | கூடாது.<br>பட்டியல்காலம் முடிந்த நிலையில் பட்டியல் இறுதி செய்யப்பட்டால், அந்தப் பட்டியல் காலத்தில் எழுந்த உண்மையான காலிப்பணியிடங்களை மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும்.<br>பட்டியல் காலம் முடியுமுன்னரே, காலிப்பணியிட மதிப்பீடு ஒப்புதலளிக்கப்பட்டிருந்தாலும் பட்டியல் இறுதி செய்யப்படும் நாளில் பட்டியல் காலம் முடிவுற்றிருந்தால் விடுப்புக்காப்பு, எதிர்பாரா இனங்களுக்காக சேர்க்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையை நீக்கி, உண்மையாக எழுந்த காலிப்பணியிடங்களுக்கு மட்டுமே பட்டியல் இறுதி செய்யப்பட வேண்டும். |
| 12 | பதவி உயர்வுக் குழுவிற்கான கருத்துரு தொடர்பான ஐயங்களுக்கு எந்த அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும் | செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் |